DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Judicial Magistrate No.II, Mayiladuthurai

**CC. No. 119/2025**

**Deposition of LW5 examined as PW3** Dt. 07.07.2025

| | |
|---|---|
| Name | சுதாகர் |
| Father's/Husband's Name | அன்பழகன் |
| Village | இளநிலை தர ஆய்வாளர், திருப்பூர் |
| Taluk | |
| Age | 45/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 07.07.2025

(A1,A2 present)

**முதல் விசாரணை**

நான் தற்போது திருப்பூரில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தில் இளநிலை தர ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 10.10.2023 ம் தேதி மயிலாடுதுறை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தின் மண்டல ஆய்வகத்தில் உதவி தர ஆய்வாளராக பொறுப்பு பணியில் இருந்த போது மயிலாடுதுறை குடிமைபொருள் வழங்கல் குற்றபுலனாய்வு பிரிவு குற்றஎண். 64/2023 என்ற வழக்கில் மாதிரிக்கு எடுக்கப்பட்ட அரிசியினை 12.10.2023 ம் தேதி ஆய்வு செய்து பொது விநியோக திட்டத்தில் வழங்கப்பட்ட அரிசியாக உள்ளது என்று சான்று வழங்கினேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுகை தரச்சான்றிதழ் நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **கைப்பற்றுகை தரச்சான்றிதழ் அ.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் முதல் விசாரணையில் குறிப்பிட்ட குடோனில் பொது விநியோக திட்டத்திற்கான அரிசி மூட்டைகளும் இருக்கும் என்றால் சரிதான். ஆய்வாளர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க பொதுவிநியோக திட்டத்திற்கான அரிசியை எடுத்து ஆய்வு செய்து இந்த தர சான்றிதழ் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு சம்பந்தமான விபரம் தெரியுமா என்றால் கைப்பற்றபட்ட அரிசி ஆய்வுக்கு வந்த விபரம் மட்டும் தெரியும். தர சான்றிதழ் வழக்கிற்காக போலியாக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க எதிரிகள் மீது போடப்பட்ட பொய்யான முதல் தகவல் அறிக்கையை அனுசரித்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

என்னால் எழுதிக்கொள்ளப்பட்டு, எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

7.7.25

நீதித்துறை நடுவர் எண்-II
மயிலாடுதுறை